<u>பதிவஞ்சல் மூலம்.</u>

**ஆதிதிராவிடர் நல ஆணையரின் செயல்முறைகள், சென்னை-5.**

**முன்னிலை: திருமதி சோ.மதுமதி,இ.ஆ.ப.,**

ந.க.எண். இ5/11429/2022-3 நாள்.05.07.2022.

பொருள்: பணியாளர் தொகுதி - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை - 2021-22 ஆம் ஆண்டுக்கான காலி பணியிடங்கள் நிரப்புதல் - இளநிலை உதவியாளர் பணியிடங்களை கருணை அடிப்படையில் வேலை கேட்டு காத்திருப்போர்களைக் நியமித்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1)துறை, நாள்.23.01.2020

2. சம்பந்தப்பட்ட ஆவணங்கள்

&&&&&

ஆணை:

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி கோட்டம், புத்தாம்பூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 19.02.2005 அன்று காலமான திரு அ.குணசேகரன். என்பவரின் மகன், திரு கு.நாராயணன். என்பவருக்கு கல்வித்தகுதி மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி காத்திருப்போருக்கான முதுநிலையின்படி, கருணை அடிப்படையில், ஆதிதிராவிடர் நலத் துறையில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் 10 (அ) (1)ன் கீழ் முற்றிலும் தற்காலிகமாக கீழ்கண்டவாறு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர்/முகவரி | பணிநியமனம் வழங்கப்படும் இடம் |
|---|---|---|
| 1. | கு.நாராயணன்,<br>த/பெ.அ.குணசேகரன்,<br>பாலையூர்,<br>கண்டனூர் அஞ்சல்,<br>காரைக்குடி வட்டம்,<br>சிவகங்கை மாவட்டம்-630 104. | இளநிலை உதவியாளர்,<br>அரசு ஆதிந கல்லூரி மாணவர் விடுதி,<br>புதுக்கோட்டை மாவட்டம். |

2. தனியருக்கு Pay Level-8-ல் (ரூ.19,500 - 62,000) என்ற ஊதிய நிலையில் ஊதியமும் மற்றும் விதிமுறைகளின்படி இதர படிகளும் வழங்கப்படும்.

3. தனியரது நியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இவர் இந்த தற்காலிக நியமனத்தை காரணங்காட்டி யாதொரு முன்னுரிமையும் பிற்காலத்தில் கோரக்கூடாது. இவரருக்கு, வழங்கப்பட்டுள்ள பணியிடத்தில் தனது உடற் தகுதிச் சான்றினை சமர்ப்பித்து (Medical Fitness Certificate)உடனடியாக பணி ஏற்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்.

4. தனியர், பணியில் சேர்ந்த தேதியினை சம்பந்தப்பட்ட பள்ளி, தலைமை ஆசிரியர் உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. தனியர், பணியில் சேர்ந்ததும் விதிகளின்படி பணிப்பதிவேடு ஆரம்பிக்கும்போது கருணை அடிப்படையில் தற்காலிகமான நியமனம் செய்யப்பட்டவரெனத் தெளிவாகக் குறிப்பிடும்படியும், சம்மந்தப்பட்ட கட்டுப்பாட்டு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. தனியரது கருணை அடிப்படை நியமனம் முற்றிலும் தற்காலிகமானது என்பதால் இவரது பணி இளநிலை உதவியாளர் பதவியில் அரசு மட்டத்தில் உரிய விதிகளை தளர்வு செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர்தான் வரன்முறை செய்யப்படும். எனவே, விதிகளின்படி இவருக்கு ஒரு வருடாந்திர ஊதிய உயர்வினைத் தவிர அடுத்து வரும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் வழங்கப்பட மாட்டாது.

7. தனியர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி சமர்பித்த கல்வி தகுதி சான்றுகள் மற்றும் பிற ஆவணங்கள் பிற்காலத்தில் தவறானது எனக்கண்டறியப்பட்டால் தனியரது பணிநியமனம் தானாகவே எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

8. தனியர் இணைப்பில் கண்டுள்ளபடி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த இரண்டாண்டுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (DOM) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். தொடர்ந்து மூன்றாண்டுகளில் இரண்டு ஆண்டு பணிக்காலத்தை தகுதிகாண்பருவ காலமாக முடித்திடல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்து உத்திரவிடப்படும் வரை இவர் ஒரே ஒரு வருடாந்திர ஊதிய உயர்வு மட்டும் பெற தகுதியுடையவர். தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்ற பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார்.

ஒம்/—சோ.மதுமதி,
ஆதிதிராவிடர் நல ஆணையர்.

ஆதிதிராவிடர் நல ஆணையருக்காக. 1/5

பெறுநர்.
திரு கு.நாராயணன்,
த/பெ.அ.குணசேகரன்,
பாலையூர்,
கண்டனூர் அஞ்சல்,
காரைக்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்-630 104.

நகல்.

1. அரசு முதன்மைச் செயலர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச் செயலகம், சென்னை 9
2. காப்பாளர்,
   அரசு ஆதிந கல்லூரி மாணவர் விடுதி,
   புதுக்கோட்டை மாவட்டம்.
3. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
   புதுக்கோட்டை மாவட்டம்.
4. முக்கிய ஆவணத் தொகுப்பு.
5. சம்பந்தப்பட்ட கோப்புகளுக்கு.
6. உபரி – 1.